செ.கு.எண்: 281

நாள்: 13-08-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

# அறிக்கை – 13.8.2012

சென்னை பெருநகர காவல், மணலி புதுநகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கே.வேலுசாமி அவர்கள் 11.8.2012 அன்று உடல் நலக்குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை, மோட்டார் வாகனப் பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.கே.கண்ணன்அவர்கள் 11.8.2012 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை பிரிவில் முதல்நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. பா.அகஸ்டின் அவர்கள் 12.8.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. வேலுசாமி, முதல் நிலைக் காவலர்கள் திரு.கண்ணன், திரு.அகஸ்டின் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உடல் நலக் குறைவால் காலமான திரு. கே. வேலுசாமி, திரு.கே. கண்ணன், மற்றும் மாரடைப்பால் காலமான திரு. பா. அகஸ்டின் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு ல்ட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.